செ.வெ.எண்:11/ஜனவரி நாள்: 07.01.2016

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் 2016-ஆம் ஆண்டிற்கான பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் விழா தொடங்கி வைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து**

**இராமநாதபுரம் மாவட்டம் பட்டிணம்காத்தான் கிராம அங்காடியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் பொங்கல் பரிசுத் தொகுப்பினை பயனாளிகளுக்கு வழங்கினார்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் 2016-ஆம் ஆண்டிற்கான பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் விழா சென்னையில் இன்று (07.01.2016) தொடங்கி வைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் பட்டிணம்காத்தான் கிராம அங்காடியில் அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பினை இன்று (07.01.2016) வழங்கினார். இதன்படி பட்டிணம்காத்தான் கிராம அங்காடியில் 968 குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்துள்ளனர்.

ஓர் குடும்பத்திற்கு தேவையான 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, 2 அடி நீள கரும்பு மற்றும் ரொக்கமாக ரூ.100/- அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு, இராமநாதபுரம் மாவட்டத்தில் அரிசி பெறும் 3 இலட்சத்து 43 ஆயிரத்து 585 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூபாய் 3 கோடியே 43 இலட்சத்து 58 ஆயிரத்து 500 மதிப்பில் வழங்கப்படவுள்ளது. தமிழ்நாடு முழுவதும் 1.91 கோடி அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுப் பொருட்களுடன் ரூபாய் 318 கோடி மதிப்பில் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.அ.அன்வர்ராஜா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.து.ஆரோக்கிய சுகுமார், முதுகுளத்தூர் கூட்டுறவு நிலவள வங்கித்தலைவர் திரு.இரா.தர்மர், மண்டபம் பேரூராட்சித் தலைவர் திரு.தங்கமரைக்காயர், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் திருமதி.முனியம்மாள் முனியசாமி, திரு.நாகநாதன்,ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் திரு.ஜி.முனியசாமி மற்றும் கூட்டுறவு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**